5th August 1966]

The Agro-Industries Corporation, which has been set up recently will consider the question of starting such of those production units as are necessary in Thanjavur district as well as in other districts.

மரைன் டீசல் இயந்திரத் தொழிற்சாலை

* 109 கேள்வி.—திரு. செ. மாதவன் :
திரு. எம். எஸ். செல்வராஜன் : } கனம் முதல் அமைச்சர்

7—8—1965-ல் குறுகியகாலக் கேள்வி எண் 1-க்கு அளித்த பதிலை யொட்டி, தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

சென்னை அருகில் எண்ணூரில் படகு டீசல் இயந்திரத் தயாரிப்பு நிலையம் ஏற்படுத்தும் திட்டத்தின் தற்போதைய நிலை என்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : There is reason to believe that the Government of India have decided not to set up the Marine Diesel Engine Factory in Madras State. No official communication has, however, been received from them.

திரு. செ. மாதவன் : *தலைவர் அவர்களே, முன்பு இந்தச் சட்ட மன்றத்திலே தொழிலமைச்சர் அவர்கள், இந்தத் தொழிற்சாலை தமிழ் நாட்டில் நிச்சயமாக ஆரம்பிக்கப்படும், அதற்கு மத்திய சர்க்கார் பணம் ஒதுக்கியிருக்கிறது என்று கூறினார்கள். இப்போது அது கைவிடப்படுவதற்குக் காரணம் என்ன ?*

கனம் திரு. எம். பக்தவத்சலம் : *பணம் ஒதுக்கியிருப்பதாகக் கூறியதாக நினைவு இல்லை. அப்போது இந்தத் தொழிற்சாலைக்கான இடம் கேட்டார்கள். அந்த இடத்தை மத்திய அரசிலிருந்து சம்பந்தப்பட்ட அமைச்சர் வந்து பார்த்தார். அந்தத் தொழிற் சாலை இங்கு ஆரம்பிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்பட்டது. மேலும் ஆராய்ந்து இதை வேறு இடத்தில் அமைப்பது நலம் என்று மத்திய அரசாங்கம் கருதுவதாகத் தோன்றுகிறது. இது வரை இறுதியான முடிவு ஒன்றும் தெரியவில்லை.*

திரு. எம். எஸ். செல்வராஜன் : *நம்முடைய ராஜ்யத்தில் வேறு ஏதேனும் இடங்களில் இந்தத் தொழிற்சாலையை அமைக்கப் பரிசீலனை செய்யப்பட்ட விவரம் இந்த ராஜ்ய அரசாங்கத்திற்குத் தெரியுமா ?*

கனம் திரு. எம். பக்தவத்சலம் : *அதைப்பற்றிய தகவல் இல்லை.*

திரு. மீ. கலியாணசுந்தரம் : *இது பற்றி முன்பு ஒரு முறை சட்ட சபையில் கேட்டபோது அமைச்சர் திரு. வெங்கட்டராமன் அவர்கள், இதற்காக நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டிருக்கிறது, நிச்சயமாக இந்தத் தொழிற்சாலை இங்கே நிறுவப்படும் என்று கூறினார்கள். இப்போது இது மாறுவதற்குக் காரணம் என்ன ? ஆர்ஜிதம் செய்யப்பட்ட நிலம் விலை கொடுத்து வாங்கப்பட்ட நிலமா அல்லது அரசாங்கத்தின் நிலமா ?*

கனம் திரு. எம். பக்தவத்சலம்: நிலம் ஆர்ஜிதம் செய்யப்படவில்லை. ஒரு திட்டம் எடுத்துக் கொள்ளும்போது இந்த நிலம் அதற்காக ஒதுக்கப்படலாம் என்ற முறையில் இடம் காட்டப்பட்டது. இதோ தகுதியான நிலம் இருக்கிறது என்று காட்டப்பட்டது. பிறகு, இதை மத்திய அரசாங்கம் வேறு இடத்தில் வைக்கலாம் என்று யோசித்துக் கொண்டிருக்கிறது. அதற்குக் காரணம் எனக்குத் தெரியாது. இங்கே வைக்கலாம் என்று நாங்கள் தெரிவித்திருந்தோம்.

திரு. இராம. அரங்கண்ணல்: தமிழகம் கடலோரப் பகுதி நிரம்பிய பிரதேசம் என்ற காரணத்தால், மீன் பிடிக்க வசதியாக இருக்கிறது என்ற காரணத்தால் தமிழகத்திலே இந்தத் தொழிற்சாலையை அமைப்பதற்கு மத்திய அரசாங்கத்தை நம்முடைய அரசாங்கம் வற்புறுத்துமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இந்தக் கருத்தை இந்த அரசு தெரிவித்திருக்கிறது.

அரசாங்கத் தொழில் பட்டறை, வேலூர்

***110 கேள்வி.—திரு. எஸ். ஜே. ராமசாமி:** கனம் முதலமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வடார்க்காடு மாவட்டம், வேலூர் நகரத்தில் உள்ள அரசாங்கத் தொழில் பட்டறையில் 1965 ஜனவரி முதல் 1966 ஜனவரி 30-ம் தேதி முடிய கட்டில், பீரோ முதலிய பர்னிச்சர் எவ்வளவு மதிப்புள்ள சாமான்கள் தயாரிக்கப்பட்டன?

(இ) மேற்படி ஆண்டில் அதன் லாப நஷ்டக் கணக்கு என்ன?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: (அ) வேலூரிலுள்ள பொது நோக்குப் பொறியியல் பட்டறையைப்பற்றி கனம் உறுப்பினர் குறிப்பிடுகிறார் என்று நினைக்கிறேன். அவ்வாறாயின் இப்பட்டறையில் 1965 ஜனவரி முதல் 1966 ஜனவரி 30-ம் தேதி வரையில் ரூ. 13,55,378 மதிப்புள்ள கட்டில், அலமாரி போன்ற சாமான்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

(இ) இப்பட்டறையின் மூலம் 1—1—1965 முதற்கொண்டு 30—1—1966 வரை ரூ. 2.49 லட்சம் லாபம் கிடைத்துள்ளதாக மதிப்பிடப்படுகிறது.

ஸ்ரீவில்லிபுத்தூருக்கு அருகில் கூட்டுறவு நூற்பாலை

***111 கேள்வி.—திரு. பி. முருகையன்:** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம் ஸ்ரீவில்லிபுத்தூருக்கு அருகில் உள்ள கூட்டுறவு நூற்பு ஆலை அமைக்க சர்க்கார் அனுமதி அளித்துள்ளது உண்மையா?

(இ) ஆமெனில், எப்போது அனுமதி வழங்கப்பட்டது?